செ.வெ.எண்.763 நாள்.27.10.2009

# பொது நூலக இயக்ககம்

## நூலக வார விழா – பத்திரிக்கைச் செய்தி

நூலக இயக்கத்தை மக்களிடையே கொண்டு செல்லவும், நூல் படிக்கும் ஆர்வத்தை மேம்படுத்தவும், பள்ளி, கல்லூரி மாணவர்களை பொது நூலக உறுப்பினர்களாக்கி அவர்களின் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும் "**நமது உலகம் நூலகம்** " என்னும் சிறப்பு இயக்கம் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் 16.9.2009 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 52 வாரங்களுக்கு, வாரம் ஒரு சிறப்புச் செயல் திட்டம் அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு மாநிலம் முழுவதும் உள்ள நூலகங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

### உறுப்பினர் சேர்க்கை

"**நமது உலகம் நூலகம்** " என்ற சிறப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக உறுப்பினர் சேர்க்கை முடுக்கி விடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை உறுப்பினர்களாக்கும் சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரைப் பயிலும் மாணவ, மாணவியர் மற்றும் கல்லூரியில் பயிலுவோர் அனைவரும் தாங்கள் பயிலும் பள்ளி தலைமையாசிரியர் அல்லது கல்லூரி முதல்வரிடம் படிப்புச் சான்றிதழ் பெற்று தங்களது இல்லத்துக்கு அருகிலுள்ள பொது நூலகத்தில் உறுப்பினராகச் சேரலாம். அவ்வாறு சேரும் மாணவ, மாணவியர் அனைவருக்கும் முதலாம் ஆண்டுச் சந்தா செலுத்துவதிலிருந்து 100 சதவீதம் கட்டணச் சலுகை வழங்கப்படும். இத்திட்டம் நவம்பர் மாதம் 30–ம் தேதி வரை செயல்படுத்தப்படும்.

### மாணவ, மாணவியருக்கான போட்டிகள்

14.11.2009 முதல் 20.11.2009 முடிய ஒவ்வொரு மாவட்டத்திலும் "**நூலக வார விழா**" மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. இதனையொட்டி 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரை மற்றும் சிறந்த வாசகங்களுக்கான போட்டிகள் முதற்கட்டமாக மாவட்ட அளவிலும் பின்னர் மாநில அளவிலும் நடைபெறும்.

## பேச்சுப் போட்டித் தலைப்புகள்

1. என்னைச் செதுக்கிய நூல்.

2. படித்தேன்; உயர்ந்தேன்.

3. உலகிற் சிறந்த நூல்கள்.

## கட்டுரைப் போட்டித் தலைப்புகள்

1. நமது உலகம் நூலகம்.

2. அறிவால் உயர்வோம்.

3. நாளும் நூலகம் செல்வோம்.

3. கற்க வேண்டிய செந்தமிழ் நூல்கள்.

## நூலக விழிப்புணர்வு வாசகங்கள் போட்டி

மாணவ, மாணவியர் தங்கள் சிந்தனையில் எழும் புதிய நூலக விழிப்புணர்வு வாசகங்களை எழுதும் போட்டி, ஒவ்வொருவரும் குறைந்தது 5 வாசகங்கள் எழுத வேண்டும். சிறந்த வாசகங்களை எழுதுவோர் தேர்வு செய்யப்படுவர்.

இப்போட்டிகள் மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பெறும். மூன்று போட்டிகளிலும் மாநில அளவில் முதலிடம் பிடிக்கும் 3 மாணவ, மாணவியர் பொது நூலகத் துறையின் செலவில் **சிங்கப்பூர் சுற்றுலா** அழைத்துச் செல்லப்படுவர். இரண்டாம் இடம் பெறும் மூவர் **இந்தியச் சுற்றுலா**விற்கும், மூன்றாம் இடம் பெறும் மூவர் **தமிழகச் சுற்றுலாவிற்கும் அழைத்துச் செல்லப்படுவர். இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவியர் பொது நூலக உறுப்பினராக இருத்தல் அவசியம்.**

போட்டிகள் நடைபெறும் இடம், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சார்ந்து www.pallikalvi.in. இணைய தளத்திலுள்ள பொது நூலகத் துறைக்கான இணைப்புப் பக்கத்தில் வெளியிடப்படும்.

பொது நூலக இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.